
Can You See Me?
Simone Findley
Simone Findley
I ♡ Love You
முள்ளும் மலரும்
Pax Ravichandra
+94763223960
pax.ravichandra@gmail.com
09-09-2024

முள்ளும் மலரும்



அழுகையும் தொழுகையும்



குண்டுச் சத்தங்களில் மறையும்அழுகைச் சத்தங்கள்
இடிபாடுகளில் உயிரோடு புதையும் மனிதங்கள்
சுரங்கத்தில் மடிந்த அப்பாவிக் கைதிகள்-பொந்துக்குள்
ஒளிந்த எலிகளாய் ஹமாஸ் பயங்கரவாதிகள்



மண்ணுக்கான மதவாத அசுர யாகத்தில்
மனித உயிர்களோ ஆகுதி, மனிதக்கேடயத்திற்கு
பின்னால் மறைந்திருந்து, சுரங்கத்தில் ஒளிந்திருந்திருந்து
போராடும் பேடிகளாய் ஹமாஸ் பயங்கரவாதிகள்

யூத மங்கையரை பாலியல் வல்லுறவால் சிதைத்து,
சிறாரை வதைத்த ஹமாஸ் பயங்கரவாதம்,
உண்மையைப் புறந்தள்ளி ஒளிபரப்பாகும்
அல்ஜசீராவின் செய்திகளோ இஸ்லாமிய இனவாதம்




பல்லாயிரம் அப்பாவிகள் உயிரிழக்க
சமாதானப் பேச்சு வார்த்தையை இழுத்தடித்து
போரை தொடரும் அவலம், அல்குரானே
இறுதி வேதம், இஸ்லாமிய தேசிய கீதம்



துன்புறும் கிறிஸ்துவாய் இன்றும் மனிதம்
தலைமைக் குருவாய் அயத்துல்லா கொமேனியின்
அட்டகாசம், ஏரோது, பிலாத்துவாய்
ஈரான், யமன் அரசுகளின் தலைமைத்துவம்

மருந்து, உணவு, நீரின்றி, நாயாய்
பேயாய் மனிதம் அலைய, மடிய
வல்லமையே வேதம் என்னும் யூதம்
பயங்கரவாதம் ஜிகாத்தான வேதம்



அன்பில் நிலைத்திருப்பவன் இறைவனில் நிலைத்திருக்கின்றார்-
இறைவனும் அவரில் நிலைத்திருக்கின்றார், மனிதம்
புறந்தள்ளிய வேதமாய் அன்பு
பகைமையே வாழும் வேதமான மதப் பண்பு?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-6-9-2024



மதமும் மாச்சரியமும்





இனம், மதம், மொழி, நிலத்திற்காய் யுத்தங்கள்
சிந்திடும் எல்லோர் குருதியும் சிவப்பு நிறங்கள்
அறிந்தும் புரியாத வரட்டுத் தத்துவங்கள்
இன மதவாத உருத்திரத் தாண்டவங்கள்

உயிரோ தெய்வீகம், புரிந்தும்
உயிர்க் கொலையோ மதநாகரீகம்
நரபலிகளால் நாறிய பலிப் பீடங்கள்
அரக்கரே தெய்வமான அநாகரீகங்கள்



உண்மை, அன்பு, இரக்கம், கருணை , நீதி
அறியாத வேதங்கள், பலி, சடங்கு,
சாதியம், சாஸ்திரமான புனிதங்கள்
ஆண்டான் அடிமை உபதேசங்கள்

கண்ணிற்கு கண், பல்லிற்குப் பல்
நீதி, நியாயங்கள், அறியாத கடவுளுக்காய்
தொடரும் யுத்தங்கள், காஸா,
உக்ரேனில் நாளும் சிந்தும் இரத்தங்கள்

மதம் பிடித்த யானையும் ஒரு நாள்
நலம் பெறும், மதம் பிடித்த மனிதரோ
குணமாகாத பாவம், மதம் அபினியும்,
போதை வஸ்துமான பங்கம்





உருவம் கடந்த இறைவனோ
சத்தியம், சிவம், சுந்தரம்: நம்பிக்கை
கடந்து வாழ்ந்தறியும் சத்தியம்
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்

மனிதநேயமோ போலி, காவி, குல்லா, சிலுவை
எல்லாம் சாரமற்ற உப்பான மதச்சங்கதி
துக்கமும், துயரமுமான வாழ்வோ எரிநரகு
வெள்ளி, சனி, ஞாயிறு வெற்று வழிபாடு

சிலுவையிலும் யூத மதவாதம், நீறு, நாமத்திலும்
சமணரின் இரத்தம், சிலுவை யுத்தங்களால் சிந்திய
மனித இரத்தம், பௌத்தத்திலும், ஈழத் தமிழன்,
றொகின்ஜா முஸ்லிம்களின் அழுகைச் சத்தம்

கள்வர் குகையான ஆலயம், கல்லின் மேல் கல் இராதபடி
இடிக்கப்படும் மனுமகனின் சாபம், அழுகைச் சுவராய்
எஞ்சிய ஆலயம், அல் அ∴க்ஸாவும், அழுகைச் சுவரும்
மோதிட, யுத்தமாய் தொடரும் தொழுகைச் சத்தம்





புராணப் பொய்களால் நாறிடும் மதங்கள், அன்பு, உண்மையை
வாழ்வாக்கினால் அதுவே வழிபாடு, புரியாத நிலைப்பாடு
ஆணவம் கழித்த உள்ளுணர்வின் உன்னதமாய் இறைவன்,
நல்மனத்தவருக்கே அமைதி வானவர் சொன்ன சேதி

இடியுண்ட பாபர் மசூதி, இராமரை எள்ளி நகையாட,
சனாதனமே ஆதிவேதம் சாக்கடையாய் நாறிட,
பகைமையை பகைமையால் வெல்ல முடியாது,
பகைமையை அன்பால் தணியுங்கள் என்றுமுள்ள
தர்மம் இதுவே, ஏஸ தம்மோ சனந்தனோ



காவி, சீவர ஆடையில் ஜீவனில்லை, குல்லா,
சிலுவை, நீறு, ருத்திராட்சம் விடுதலையின் பாதையில்லை,
காற்றில் வரையும் சிலுவையிலும் இறை ஆசீர் இல்லை,
மதமாற்றமோ கறுப்புச் சந்தை வியாபாம்?



உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை,
பூவுலகில் நல்மனத்தோருக்கு அமைதி,
உன்னதமும் நல் மனதும் ஒன்றே
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
என்றுமுள்ள தர்மம் கூவியழைக்கிறது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-6-9-2024

முள்ளும் மலரும்





எதிர் வீட்டு மல்லிகை பருவத்தே பூத்து மணக்க,
இளமையின் வாசம் நெஞ்சை நிறைக்க
காளை என் சுவாசத்திலே காதலின் வாசம்
என் வீட்டு மாடியில் தவமாய் என் உபவாசம்

பள்ளி செல்லும் போதெல்லாம் கண்கள்
சொல்லும் கவிதை, தேவதை காட்சி தரும்போதெல்லாம்
விழிகள் தழுவிக்கொள்ள, நெஞ்சைக் கொள்ளை
கொள்ளும் மதிமுகத்தில் மாறாத வெட்கப் புன்னகை

கண்ணோக்க, கயல் நாணி மண் பார்க்க
பெண்ணோக்கி மனம் கவிதை பாட
விண்ணோக்கிச் சிறகடித்த வானம்பாடிகள்
வளர்பிறையாய் வளர்ந்த காதல் நிலைகள்

செல்லமாய் வளர்த்த கிள்ளை
ஆடலில் தோகை, பாடலில் கோகிலமாய்
என் நெஞ்சம் கவர்ந்த முல்லை, பாரியாய்
இதயத் தேர் ஈய என் மனதில் கொள்ளை ஆசை



வீட்டு முன்றலில் நாளும் விளையாடும்
இறகுப்பந்து, பூப்படைந்த பருவமங்கைக்குத் தூதாய்
நான் விடுத்த பந்து அவள் முற்றத்தில் விழ
பொறுக்கித் தந்தவள் விழிகளிலோ காதற் சிந்து

இறகுப்பந்தில் எழுதிய ***ஐ லவ் யூ***
அவளுக்குப் புரிந்திட, கண்ட விழிகளில் மோகனம்,
தந்த கரங்களில் காதலின் அபிநயம்
என் உள்ளமோ சிந்து பாடும் குயிலினம்



இறகுப்பந்து வழியாய் காதல் வளர்ந்திட-நாளும்
ஒரு சேதி கவிதையாய் மாறிட-அவள் எழுதிய
மடல் இறகுப் பந்துக்குள் இன்பத்தை ஊட்டிட
இறகு விரித்துப் பறந்த என் மனது

சாளரம் திறக்குமோ? சந்திர வதனம் தெரியுமோ?
மாடியறையில் இருந்து மங்கை அறை நோக்கி
பௌர்ணமி இரவில் நாளும் என் தவம்,
தேவதையின் முகதரிசனம் நான் பெறும் வரம்

சாளரம் திறந்திட சந்திரவதனத்தில்
ஒளிரும் புன்முறுவல், தேன் மழையில்
மனம் நனைய, புல்லரிக்கும் தேகம்
மனம் பாடும் மோகன ராகம்



விழிகளின் சங்கமத்தில் பிறக்கும்
காதல் மொழிகள், நாணத்தின் உச்சத்தில்
நங்கை விளக்கணைக்க, தூக்கத்திலும்
என்னைத் தாலாட்டும் வண்ணக் கனவுகள்

பார்த்தும் காதல் பசியாறாது, ஒரு மொழி
பேச விழிகள் தவிர வேறு வழி கிடையாது,
பார்த்தது போதும், தூங்குங்கள், அணையும் விளக்கு,
நெஞ்சிலே அணையாத காதலின் ஒளி விளக்கு

என் அன்னையும், அவள் அன்னையும்
சிநேகிதிகள், நாமோ சைவர், அவர்களோ
கிறிஸ்தவர், நீறும், சிலுவையும் ஒன்றிணையுமா?
நெஞ்சில் ஓயாத கவலையின் அலைகள்



நாளும் கோயிலுக்குச் சென்று வழிபடும் குடும்பம்
இறை பக்தியோ அமிர்தம், பழமை வாதம் -அவள்
தந்தை ஓர் நாள் இறக்க, தாயோடு சென்று நானும்
உதவிட, அன்போடு உறவாடிய அவள் அன்னை



மகனே, நாங்களோ கிறிஸ்தவர் என் மகளோ
பருவமங்கை, இனி ஒருபோதும் இறகுப்பந்து-என்
வீட்டு முற்றத்தில் விழாமல் பார்த்து விளையாடு,
வாழ்வு களியாட்டமுமல்ல, விளையாட்டுமல்ல

Love all எனத் தொடங்கும் இறகுப்பந்து விளையாட்டு
இறகொடிந்த பறவை என் விழிகளில் கண்ணீரின் நீராட்டு
சிறகுதிர்ந்த இறகுப்பந்தாய் என் மனம், ஜோடி சேர்ந்து விளையாட
யாருமின்றி சுவரில் என் மாட்டிய மட்டையிலோ காதல் சுரம்

விக்கித்துப்போன மனம், துக்கித்தது
துயரோடு அவள் கல்லூரி போகும் வழி பார்த்து
காதலாகி நின்றது, தரை பார்த்து நடந்த மங்கை
என் பார்வையைத் தவிர்த்த நங்கை

வியாபார விடயமாய் தந்தை என்னை
கொழும்பிற்கு அனுப்பிட, இருவாரம் கழித்து வந்த
எனக்கு பூட்டிக் கிடந்த எதிர் வீட்டைக் காண அதிர்ச்சி
பொன்மகளைக் காணாத என் மனதிலே வெருட்சி



வீட்டை விற்று விட்டு தாயும் மகளும்-தங்கள்
சொந்த ஊரான சிலாபம் சென்று விட்டார்கள்
உறவுகளற்ற ஊரில் வாழ்வதை விட-உறவுகளோடு
வாழ்வது நற்துணை விதவைத் தாயின் நம்பிக்கை



அன்னை சொன்ன சேதி பேரிடியானது, பூ நெஞ்சுக்குள்
பூகம்பம் வெடிக்க. இதயம் சுக்கு நூறாயச் சிதறிட
ஓடி அவர்கள் வீட்டை எட்டிப் பார்த்தேன்,
மல்லிகைச் செடியில் மாட்டிக் கிடந்த இறகுப்பந்து

எடுத்த எனக்கோ மாளாத் துயரம், உள்ளே அவள்
எழுதிய காதல் மடல், அம்மா நம் காதலை
அறிந்துகொண்டார், மதமோ தடை, அன்னை மனதை
முறிக்க, அநாதை எனக்கோ மனமில்லை, மன்னியுங்கள்

பிறப்பிலே பெற்றோரை இழந்த ஏழைக் குழந்தை
தத்தெடுத்து என்னை அரசிளங்குமாரியாய் வளர்த்த பெற்றோரே
என் தெய்வங்கள், அவர்கள் விருப்பமே என் விருப்பம்
நான் இல்லையேல் உங்களுக்கு வேறு ஒருத்தி



காதல் என்பது வெறுங் கவர்ச்சி , பருவமயக்கத்தில்
வரும் தளர்ச்சி, கலைஞனாய் காதலை வெளிப்படுத்தியது
எனக்குப் பிடித்திருந்தது, கடவுள் துணையால் இணைந்தால்
நம் காதலோ வாழும், இல்லையேல் சாகும்



என் கானக்குயில் பறந்திட, ஒற்றைக் குயிலாய்
கரையும் என் மனது, என் கலாபமயில் மறைந்திட
முடமான மனம், இறகுப்பந்தோ காதலின் சின்னம்
மலரான என் மனமோ முள்ளான ஊனம்

அவள் கல்லூரி செல்லும் பாதையோ அன்று பூவனம்
இன்றோ பாலைவனம், மனம் குமுற, விழிகளில் ஈரம்
விம்மிய மனம், முள்ளும் மலருமாய் மனித இனம்?
நீறும், சிலுவையும் கடந்த என்தன் காதல் மனம்

மாடியறையில் இருந்து நோக்க, மூடிக் கிடந்த அறை
என் இதயமோ காதலின் கல்லறை

இறகுப்பந்துக்குள் பொதிந்து வைத்த கடிதம்
பொக்கிஷமானது, பூவான மனம் பாலையாகிட
தூக்கம் துறந்த மனது துக்கத்தில் நிலைத்து
ஒற்றைக் குயிலாய் கரையுது, மல்லிகை வாடுது





காதலுக்கு ஜாதியில்லை, மதமுமில்லையே
வேதமெல்லாம் காதலை மறுப்பதில்லையே-நிஜத்தில்
பொய்யானது, சமூகம் நம்மைப் பழிக்கும்
ஜாதி நம்மைப் ஒதுக்கி வைக்கும் வேதனையானது

அவள் வாழ்வு

பூ நெஞ்சுக்குள் பூகம்பம் வெடிக்க
பூவை மனம் சுக்கு நூறானது
முளையிலே கிள்ளி எறிந்த காதல்
முதற் காதலே வேதனையான சாதல்



என் பெற்றோருக்கு நான் பட்ட கடன் பெரிது
தாய் விரும்பாத காதலோ எனக்கு வெறும் தூசு
வணங்கும் தெய்வமோ , என் சித்தமன்று, தந்தையே
உம் சித்தம் நிறைவேறுக என்ற மனுமகன் இயேசு

தாயும் ஓய்வுபெற, தந்தையில்லாத வீடு
மௌனமானது, காதற் சிந்து முடியுமுன்
பாதியில் நின்றிட-அன்னை பார்த்த
மணமகணோடு என் திருமணம் நிறைவேறியது



அண்ணன் தம்பி இருவர், பெற்றோரை இழந்தவருக்கு
அண்ணனோ தாயும், தந்தையும், தெய்வமும்
அண்ணன் மனைவியோ தம்பி எனச் செல்லம் கொண்டாடும்
மங்கை, மணப்பெண் நானோ உலகம் புரியாத மங்கை

அம்மா தன் வீட்டில், நானோ மணமகன் வீட்டில்
முதலிரவன்று அலங்கரித்த கட்டிலில் என் காத்திருத்தல்,
அழகனாய் அவர், அலங்காரப் பொம்மையாய்
அருகிருந்தும் சுவைக்காத கனியாய் நான்

வந்தவர் வார்த்தை ஏதும் பேசாமல் தூங்கிட
களைப்பு போலும், நானும் தூங்கிட
நள்ளிரவில் விழித்த எனக்கு கணவரை காணாத
பாவம், மனதிலே சொல்லொண்ணாச் சோகம்

மெல்லத் திறந்த கதவு, மெதுவாய் எடுத்த
பாதங்களில் மருதாணியின் சிவப்பு,
திறந்த யன்னல் வழியே கண்ட காட்சி
என் மரக்கலம் கடலில் மூழ்கிய சோக நிகழ்ச்சி





அண்ணி மடியில் அவரிருக்க, அவளோ
கொஞ்சிக், கொஞ்சிக் கதைபேச, தேன்நிலவாய்
அவர்கள் இரவு, தேயும் நிலவாய்
அமாவாசை இருளுக்குள் என்தன் வாழ்வு

என் முதலிரவே அமாவாசை என்றானது
என் தேன்நிலவே தேள் கொட்டிய இரவானது
உறவை அறிந்தும், அறியாதவராய் அண்ணன், அண்ணி
பாஞ்சாலியா?, பத்தினியா? புரியாத கேள்வியானது

அசோகவனச் சீதையை சிறையெடுத்தவன் நெஞ்சில்
காதல், தைத்தலம் பற்றி, கடவுள் சன்னிதியில்
மாங்கல்யம் தந்தவன் நெஞ்சிலோ அண்ணி மேல்
விரகதாபம், என்னே? இறைவா நான் செய்த பாவம்

பழகிப்போன அவர்கள் வாழ்வை, பாழாக்க நான்
விரும்பவில்லை, அன்போ ஒழுக்கம் கடந்த புனித நிலை
என் முதலிரவு அமாவாசை இருளானது

அவருக்கு ஒவ்வொரு இரவும் அண்ணியோடு
தேன்நிலவானது-அண்ணன் மனமோ ஈரமில்லா
வெண்மேகமாய் வெட்ட வெளியில் அலையுது





கத்திக் கூத்தாடாமல் அறைக்குள் என் அழுகை
விடியலில் என்னருகே அவர், நாளும் தொடரும்
காமலீலை, குளியலறையில் நாளும் என் அழுகை
கயிறறுந்த பட்டமாய் என் வாழ்க்கை

அன்னையும் இறந்திட. அநாதை நான் என்னிலை புரிந்திட
கண்ணீரைத் துடைத்து வாழத் துடித்தேன்
படித்த படிப்புக்கு கிடைத்த ஆசிரியை வேலை-நாளும்
பஸ் வண்டியில் பலமைல் பயணமாகும் வாழ்வோ சோலை

பஸ் சாரதி இளைஞர் என்னைப் பரிவோடு
பார்த்த பார்வையில் கண்ணியம், நான் வரக்
காத்திருந்து என்னை ஏற்றிச் செல்லும் கரிசனம்
மௌனராகமான எங்கள் உறவாடல் ஒரு தரிசனம்

பலமாதங்கள் போக கல்லான என் மனம் மெல்லக் கனிந்தது,
நானும் வாழ்வேன் என்னுள் வீறாப்பு பிறந்தது, ஒரு நாள்
இருவரும் மனம் வீட்டு பேசிய பொழுது, மண்ணும், மழையுமாய்
கலந்த மனங்களில் காதலின் புது வரவு, நல் வரவானது





வேலைக்கு போய் வந்து. மாதச் சம்பளத்தைக் கொடுக்க
மனம் மகிழும் அண்ணி, என்னைத் துன்புறுத்தவில்லை
ஆனாலும் வீட்டில் நான் மகாராணியில்லை, ஒருநாள்
போய்வருகிறேன் எனப் போனவள் திரும்பி வரவில்லை

ஓடிப்போனவள் ஊரார் கதை, வீட்டின் கதை ஊர் அறிந்தால்
காறித் துப்பும், எல்லாம் ஊமை நாடகமான நிலை,
முள்ளும் மலருமாய் வாழ்க்கை, என் வாழ்க்கை என் கையில்
கண்ணகி நானில்லை, உண்மை அன்பே கற்பு என் நிலை

கார் கண்ட மயிலாய் மனம் ஆட
கானம் கேட்டு சோடிக் குயிலாய் மனம் பாட
மழை கண்ட பயிராய் மனம் செழிக்க, வாழ்வு
தந்த இளைஞனோ பௌத்த சிங்களவர்



என் கார்குழலில் மலர் பூக்க, பிறை நுதலில்
பொட்டும் சிரிக்க, கைவளையும், மெட்டியும் சிந்துபாட
தாமரை மலர் ஏந்தி பெருமான் புத்தரை வழிபட்ட
தம்பதிகள், ஆசி கூறிய வாழ்த்திய பௌத்த பிக்குகள்



சப்பே தத்தா பவங்க துதி தத்தா
சகல உயிர்களும் நலமாய் வாழப் பிரார்த்திக்கிறேன்
இனம், மதம் கடந்து, புரிதலில் மலர்ந்த உள்ளம், நீர்,
நெருப்பு தாண்டிய புரட்சியில் ஆனந்த வெள்ளம்



இது ஒரு பெண்ணின் உண்மைக் கதை
ஏற்பதும், மறுப்பதும் அவரவர் நிலை
நம் வாழ்வு நம் கையில்,
சவாவலே சமாளி என வாழ்வதே முறை

முள்ளும் மலருமாய் வாழ்க்கை, சோர்ந்து
வாடி உதிர்வதும், போராடி மலர்வதும்
அவரவர் இயல்பு, மெய் அன்பே ஆனந்த உறவு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-6-9-2024

வெண்ணிலா





பூவிழிகள்தான் பூத்தூவி காதல் சொல்ல,
புன்னகைதான் இதயத்தை தென்றலாய் வருடிச் செல்ல,
விண்தாண்டி வந்த தேவதையோ நங்கை, நெஞ்சுக்குள்
நினைத்தாலே இனிக்கும் தேன்வதையாய் மங்கை

வண்ணமதான் மலரைச் சொல்ல, மல்லிகை
வாசம்தான் மனதை கொள்ளை கொள்ள
எண்ணம்தான் கவிதை சொல்ல-என்
இதயம்தான் சொல்லியது காதல்

காணும்போதெல்லாம் மனதிலே ஆனந்தப் பள்ளு
மங்கையோ மனதை கொள்ளை கொள்ளும்
பேரழகு, என் காதல் வானத்து தேன்நிலவு
அமாவாசை காதலர் காணாத இரவு

சாயலில் தோகை, சந்தத்தில் அஞ்சுகத்தின்
பாஷை, கானத்தில் குயிலின் தேவராகம்
காதலர் உள்ளத்தில் ஓயாத ஆனந்த ராகம்
வாழ்வோ நாளும் தேன்நிலவான வரம்





எண்ணம்தான் காதலை பண்ணாய்ப் பாடிச் சொல்ல,
பெண் வண்ணம்தான் நாணத்தை அள்ளிப் பூசிக் கொள்ள,
கன்னம்தான் கிண்ணம் பழத்தைச் சொல்ல,
பன்னமாய் பூத்த உடல் என் நெஞ்சில் படர்ந்திட
இதயத்தில் பூத்த காதல்தான் என்னே!

பொன்னகையைப் பரிசளித்தேன் புன்னகைத்த
மதிவதனி, சிலம்பைப் பரிசளித்தேன், நடையோ
நாட்டியமான கண்ணகி,
பொற்குண்டலங்களைப் பரிசளித்தேன்
சூடி ஆடிய மங்கையோ குண்டலகேசி,
என்னைக் கையளித்தேன் தன்னைச்
சூடித்த தந்த ஆண்டாளாய் கோதை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-1-9-2024